### மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த விழிப்புணர்வு

சென்னை, மார்ச்.22-

கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனா வைரஸ் பீதியால் பொது மக்களும் விழிப்புணர்வு அடைந்து பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், தமிழக சுகாதாரத்துறையுடன் இணைந்து கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வை பயணிகளுக்கு ஏற்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் திருமங்கலம், விமான நிலையம், ஆலந்தூர், வடபழனி, கோயம்பேடு, எழும்பூர், சென்டிரல் ஆகிய 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதில் 5 ஆயிரத்து 500 பயணிகளுக்கு கை சுத்திகரிப்பான் வழங்கப்பட்டு, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வினியோகிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு பணி காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 6 மணி முதல், இரவு 8 மணி வரையிலும் நடந்தது.